# பனித்துளி செய்திகள்!

**“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**03.09.2018**

## 9.‘ஆபகூக்’ வழங்கிய வாழ்வின் செழிப்பான சங்கீதம்!

*வசந்தம் இல்லை! பலனும் இல்லை! தானிய விளைவும் இல்லை! என “இல்லை.... இல்லை” என்ற வாழ்வின் கடினமே* **எனது உயரமான ஸ்தலம் - MY HIGH HILLS** *என ஆபகூக் கண்டார்! அவைகளைக் கடந்து சென்றிட கர்த்தரால் கட்டளையிடப்பட்ட ஆபகூக், ‘தன்னால் அது முடியாது’ என அறிந்து, தன் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூர்ந்தார்! ஆ, இது ஆச்சரியம்.... என் கால்களை உயர் குன்றுகளில் பாய்ந்து நடக்கும் “***மான் கால்களைப்***” போலாக்கினார்! என்னை நடக்கப் பண்ணினார்! என மகிழ்ந்து கூறினார் (ஆபகூக்.3:17-19). ‘இது ஆபகூக் ஒப்புவித்த சங்கீதம்’ என 19-ம் வசனம் கூறுகிறது! அன்று, ‘பாமாலை பாடி’ கொல்கொதா குன்றில் ஏறி வெற்றி சிறந்த இயேசுவின் அடிச்சுவடு, இன்று நம்மையும் அவர் சுவடு பின்பற்ற அழைக்கிறது!*

**- ரத்னம்**